DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C. 150/2024 |
| Deposition of Witness for | : | P.W. 2 |
| Name | : | லெவே ஜெரால்டு பாபு |
| Father's Name | : | பாக்கியராஜ் |
| Village | : | காளையார்கோவில் |
| Taluk | : | காளையார்கோவில் |
| Calling | : | விவசாயம் |
| Religion | : | கிறிஸ்தவர் |
| Age | : | 48/2025 |

**(வழக்கின் 1 மற்றும் 3 ம் எதிரி ஆஜர். 2-ம் எதிரி ஆஜர் இல்லை. இரண்டாம் எதிரி சார்பில் Cr.P.C பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 03.02.2025

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது காளையார்கோவில் விஜபி நகரில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை பார்த்து வருகிறேன். அ.சா.1 அமலி கிரேசி எனது மனைவி. சாட்சிகள் ஜோபின், ஜெர்லின் ஆகியோர் மைத்துனர், ஜேக்கப் ஜெயபாரி என்பவர் மகன் மற்றும் மகள் ஆவார். சாட்சிகள் உபகார மேரி, சின்னப்பன் ஆகியோர் எனது மாமனார் மற்றும் மாமியார் ஆவார். எனக்கு இரண்டு மைத்துனர்கள் செல்வக்குமார் மற்றும் ஜேக்கப் ஜெயபாரி ஆவார். என் மைத்துனர்கள் இருவரும் துபாய் அபுதாபியில் வேலை பார்த்து வருகிறார்கள். எனது மாமியாரும், மாமனாரும் கல்லுவழியில் குடியிருந்து வருகிறார்கள். எனது மாமியாரும், மாமனாரும் எனது மைத்துனர் ஜேக்கப் ஜெயபாரி குழந்தைகளையும் எனது மைத்துனரின் மனைவி பார்த்து வருகிறார். எனது இளைய மைத்துனர் செல்வக்குமாரின் மனைவி மற்றும் அவரது

குழந்தைகள் ராயப்பன்பட்டியில் குடியிருந்து வருகிறார்கள். கடந்த 25.01.2024 ம் தேதி இரவு 9.30 மணியளவில் கல்லுவழியில் எனது மாமியாரும், மாமனாரும் மற்றும் அவர்களுடன் குடியிருக்கும் எனது மைத்துனரின் மனைவி மற்றும் அவரது குழந்தைகளை பார்த்துவிட்டு பின்பு 26.01.2024 ம் தேதி காலை சுமார் 7.00 மணியளவில் எனது மனைவிக்கு போன் வந்தது. எனது மைத்துனரின் மகன் ஜோபின் என்பவர் போன் மூலமாக வீட்டில் உள்ள அனைவரையும் யாரோ இரும்பு ராடால் தாக்கி காயப்படுத்தி வீட்டில் இருந்த நகைகளை எடுத்துச்சென்றுவிட்டதாக தகவல் தெரிவித்தார். உடனே நானும் என் மனைவியும் இருசக்கரவாகனத்தில் கல்லுவழியில் உள்ள எனது மாமனார் வீட்டிற்கு சென்றோம். நாங்கள் வண்டியை நிறுத்திவிட்டு பார்த்தபோது வீட்டின் முன்னால் எனது மாமனார் சின்னப்பன் பலத் காயங்களுடன் சுயநினைவில்லாமல் தரையில் கிடந்தார். அவரை தூக்கி வீட்டிற்கு கொண்டு வந்தோம். வீட்டிற்குள் சென்று பார்த்போது எனது மாமியாரும், எனது மைத்துனரின் மகன் ஜோபின் தலையில் ரத்த காயத்துடன் வந்தார். அவரையும் என் மானாருடன் நான் உட்கார வைத்தேன். நான் என் மனைவி வீட்டில் ஹால் பகுதியில் சென்று பார்த்தபோது எனது மாமியாலும் எனது மைத்துனரின் மகள் ஜெர்லினும் தலையில் அடிப்பட்டு ரத்தக்காயங்களுடன் இருந்தார்கள். அவர்களுக்கு உயிர் இருந்ததா என்று தட்டி பார்த்தோம். உயிர் இருப்பது தெரிந்த அங்கே இருக்கவைத்தோம். மேலும் பெட் ரூம் சென்று பார்த்தபோது எனது மைத்துனரின் மனைவி வேதபோதக அரசி தலையிலும், கையிலும் அடிப்பட்டு கட்டிலுக்கு கீழே சுயநினைவு கிடந்தார். மேலும் வீட்டின் இருந்த பீரோ மற்றும் கபோர்டு உடைக்கப்பட்டு உள்ளே இருந்த பொருட்கள் சிதறிக்கிடந்தது. பின்பு நானும் எனது கணவரும் அருகில் குடியிப்பவர்களான ஆரோ`க்கியமேரி. மரியம்மாள், சாந்தி இந்துமதி ஆகியோர்களை உதவிக்கு அழைத்து 108 ஆம்புலன்சு மூலமாக எனது மாமனார் மற்றும் மாமியாரை காளையார்கோவில் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். மற்ற காயம்ப,ட்ட எனது மைத்துனரின் மனைவி மற்றும் அவரது குழந்தைகளை சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். அதன்பிறகு எனது மாமனார் மற்றும் மாமியார் மற்றும் எனது மைத்துனரின் மனைவி

மற்றும் அவரது குழந்தகளை மதுரை வேலம்மாள் தனியார் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றோம். எனது மைத்துனரின் மனைவி 29.01.2024 ம் தேதி எனது மயக்கநிலை தெளிந்தது. காளையார்கோவில் போலிசார் விசாரணை செய்தார்கள். அப்போது 10 பவுன் தாலி செயின் ஒன்று, 5 பவுன் தங்கசெயின் ஒன்று, 3 பவுன் எடையுள்ள கல் வைத்த நெக்லஸ் ஒன்று, 2 பவுன் எடையுள்ள கல் வைத்த 2 ஜோடி ஜிமிக்கி, சுமார் 2 பவுன் எடையுள்ள நவரத்தின மோதிரம் ஒன்று, 1 ஜோடி ஜிமிக்கி, அரை பவுன் தோடு ஒன்று ஆக மொத்தம் 22 பவுன் கொள்ளையடிக்கப்பட்டதாக எனது மைத்துனரின் மனைவி தெரிவித்தார். கொள்ளையடிக்கப்பட்ட நகைகளின் மதிப்பு ரூ.7,05,000/- ஆகும். நான் வழக்கு சம்மந்தமாக காவல்நிலையம் சென்று யாரையும் அடையாளம் காட்டவில்லை. வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

**1, 2, 3 ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:** இல்லை

A PASUMPON SHANMUGAIAH

Digitally signed by A PASUMPON SHANMUGAIAH
Date: 2025.02.03 06:42:22 +0000

Chief Judicial Magistrate,

Sivagangai.